## 12

# புதிய ஏற்பாட்டின் சபை

இந்த உலகத்தில் வாழ்கின்றபோது முடிவுகள் எடுப்பது என்பது அவசியமான தேவையாய் இருக்கின்றது. நமது முடிவுகளில் பெரும் பாலானவை சிறியவையாக, அந்த நேரத்திற்குரியதாக, மற்றும் குறிப்பிட்டுக் கூறத் தேவையற்றவையாக இருக்கின்றன. மற்ற முடிவுகள், நாம் இந்த வாழ்க்கையில் தேவனுக்கு முன்பாக வாழும் வழியில் விளைவை ஏற்படுத்தி, நமது நித்திய அடைவிடத்தைத் தீர்மானிப்பதாக இருக்கும் அளவுக்கு மிகவும் முக்கியமானவைகளாக இருக்கின்றன. வாழ்க்கை மற்றும் நித்தியத்தின் மீது செல்வாக்கைச் செலுத்தும் இந்த முடிவுகளை மேற்கொள்வதற்கு முன்பு தீவிரமான சிந்தனையும் ஜெபம் நிறைந்த ஆராய்ச்சியும் தேவைப்படுகின்றன. புதிய ஏற்பாட்டின் சபையில் பிரவேசிக்கும் முடிவைக் காட்டிலும் சிறந்த முடிவாக வேறு எதனையும் கருத முடியாது. இந்தக் கேள்வி யைப் பொறுத்தமட்டில் நாம் எடுக்கும் முடிவானது, தேவனுக்காக நமது அன்றாட வாழ்க்கை, நமது ஆவிக்குரிய ஒப்புத்தன்மை, நமது ஆராதனை, மற்றும் நமது ஆவிக்குரிய ஊழியம் ஆகியவற்றின் மீது செல்வாக்கைச் செலுத்தும். ஆகவே இந்தக் கேள்வியானது வேத வசனங்களின் தெளிவான உபதேசங்கள் மற்றும் தப்பெண்ணமற்ற வகையில் நமது தர்க்க அறிவைப் பயன்படுத்துதல் ஆகியவற்றின்படி பதில் அளிக்கப்படும் வரையில் ஆழ்ந்த சிந்தனையோடு கவனிக்கப்பட வேண்டும்.

நமது உறுதிப்பாடு மற்றும் நம்பிக்கை கொள்ளும் பண்பு ஆகியவற்றிற்கு வேண்டுகோள் விடுக்கக்கூடிய அநேக வித்தியாசப் பட்ட சபைகள் நமது உலகத்தில் நிறைந்துள்ளன. ஒரு தீர்மானம் எடுக்கப்பட்டாக வேண்டும். புதிய ஏற்பாட்டின் சபை எது? எப்படி

*நாம் முடிவு செய்வோம்?*

*தேவனைப் பிரியப்படுத்தும் சரியான தெரிவை முடிவு செய்யும்படியும், அதற்கான ஆதாரத்தைச் சிந்தித்துப் பார்க்கும் படியும் பொது அறிவுக்கேற்ற வழிகாட்டுதல்கள் நமக்குத் தொடர்ந்து துணைபுரிய வேண்டும். நாம் நேர்மையுடன் இந்த வழிகாட்டுதல் களைப் பின்பற்றினால் இந்த நாட்களிலும் இவ்வுலகத்தில் புதிய ஏற்பாட்டின் சபையை நம்மால் அடையாளம் கண்டு கொள்ள முடியும்.*

*இந்த வழிகாட்டுதல்கள் யாவை?*

## முதலாம் நூற்றாண்டில் புதிய ஏற்பாட்டின் சபை எவ்விதம் அடையாளப்படுத்தப்பட்டது?

*புதிய ஏற்பாட்டின் சபையைப் பற்றிய முதலாவது கண் ணோட்டம் அப். 2ன் பிற்பகுதியில் காணப்படுகின்றது. சுவிசேஷப் புத்தகங்களில் இதைப் பற்றி இயேசுவாலும், அப்போஸ்தலர்களாலும் தரப்பட்ட தீர்க்கதரிசனங்களில் சபை பற்றிய உருவகத்தின் பதிவுகளானது (மத். 16:18; மாற். 9:1; அப். 1:4-8) நமக்குள் ஒரு எதிர் பார்ப்பையும், காத்திருத்தலையும் ஏற்படுத்தியிருக்கின்றன. பிறகு, அப். 2ல் சபையானது நிலைநாட்டப்படுகையில் பரிசுத்த ஆவியான வரால் சபையின் உயிருள்ள சித்தரிப்பு நமக்கு முன்பாக வைக்கப் பட்டுள்ளது.*

*சபையின் இந்தச் சித்தரிப்பு அதன் முக்கிய பண்புகளைக் காண நமக்கு உதவுகின்றது. உண்மை வாழ்க்கையில் இயேசு உண்டாக்கின சபை எப்படியிருக்கும் என்று நாம் ஆச்சரியப்படும்படி விட்டுவிடப் படவில்லை.*

*லூக்காவினால் அப். 2ல் தரப்பட்டுள்ள சபையின் முக்கியப் பண்புகளைக் கவனமாக ஆராய்ச்சி செய்யுங்கள்:*

> *அவர்கள் அப்போஸ்தலருடைய உபதேசத்திலும், அந் நியோந்நியத்திலும், அப்பம் பிட்குதலிலும், ஜெபம் பண்ணுதலிலும் உறுதியாய் தரித்திருந்தார்கள்.*
>
> *எல்லாருக்கும் பயமுண்டாயிற்று. அப்போஸ்தலர் களாலே அநேக அற்புதங்களும் அடையாளங்களும் செய்யப்பட்டன. விசுவாசிகளெல்லாரும் ஒருமித்திருந்து,*

*சகலத்தையும் பொதுவாய் வைத்து அநுபவித்தார்கள். காணியாட்சிகளையும் ஆஸ்திகளையும் விற்று, ஒவ்வொரு வனுக்கும் தேவையானதற்குத் தக்கதாக அவைகளில் எல்லாருக்கும் பகிர்ந்து கொடுத்தார்கள். அவர்கள் ஒருமனப்பட்டவர்களாய்த் தேவாலயத்திலே அநுதினமும் தரித்திருந்து, வீடுகள்தோறும் அப்பம்பிட்டு மகிழ்ச்சி யோடும், கபடமில்லாத இருதயத்தோடும் போஜனம் பண்ணி, தேவனைத் துதித்து ஜனங்களெல்லாரிடத்திலும் தயவு பெற்றிருந்தார்கள். இரட்சிக்கப்படுகிறவர்களைக் கர்த்தர் அநுதினமும் சபையிலே சேர்த்துக்கொண்டு வந்தார் (அப். 2:42-47).*

*இந்தச் சித்தரிப்பில் சபையின் பண்புகளாக நாம் காணுகின்றவை யாவை?*

## உறுதிப்பாட்டில் பெலத்துடன் இருத்தல்

*முதலாவது பண்பானது அப்போஸ்தலரின் உபதேசம் அல்லது போதனையில் நிலையான உறுதிப்பாட்டுடன் இருத்தலாகும். லூக்கா, "அவர்கள் அப்போஸ்தலருடைய உபதேசத்திலும், அந்நியோந்நியத்திலும், அப்பம் பிட்குதலிலும், ஜெபம் பண்ணுதலிலும் உறுதியாய்த் தரித்திருந்தார்கள்" என்று கூறினார் (அப். 2:42).*

*அப்போஸ்தலருடைய உபதேசத்தில் சபையானது உறுதியாய்த் தரித்திருந்த இந்த பண்பானது, அவர்களுடைய உபதேசத்தைச் சபையார் உண்மையிலேயே பின்பற்றியதை வெளிப்படுத்துவதா யிருக்கின்றது; அவர்கள் தங்களின் ஐக்கியம், ஆராதனைக்கு ஒன்று கூடுதல், ஊழியம் மற்றும் கொடுத்தல்; "அப்பம் பிட்குதல்" என்ற கர்த்தருடைய பந்தியை ஆசரித்தல்[1] மற்றும் ஜெபம் பண்ணுதல் ஆகியவற்றிலும் அப்போஸ்தலருடைய உபதேசத்தை உண்மை யிலேயே பின்பற்றினார்கள். கிறிஸ்துவே அவர்களின் தலைவராக இருந்தார், அப்போஸ்தலர்கள் மூலமாகக் கொடுக்கப்பட்ட அவருடைய வசனத்தைக் கனப்படுத்தியதன் மூலம் சபையில் அவரது தலைமைத்துவத்தை அவர்கள் அங்கீகரித்துணர்ந்தனர்.*

*கிறிஸ்துவை அவரது சபையாகப் பின்பற்றுதல் என்ற இந்த எளிமையைக் குழப்புகின்ற பிரிவுகளை நாம் கிறிஸ்தவ உலகத்தில் அனுமதிக்கக் கூடாது. சபை என்பது மனிதரால் உண்டாக்கப்பட்ட*

அமைப்பல்ல. பரிசுத்த ஆவியானவரின் உபதேசத்தை இணக்கத்துடன் ஏற்றுக்கொண்டு, இவ்விதமாய் சுவிசேஷத்திற்குத் தங்களின் கீழ்ப்படிதலினாலே பரிசுத்த ஆவியானவரால் கிறிஸ்துவின் சபைக்குள்ளாக இணைக்கப்பட்ட மக்களின் குழுவாகவே இது இருக்கின்றது. இவர்கள் கிறிஸ்துவுக்கே உரியவர்கள். இவர்கள் மனிதத் தலைமைத்துவம் எதையும் நோக்குவதில்லை, ஆனால் சரீரத்தின் தலையாகிய கிறிஸ்துவால் வெளிப்படுத்தப்பட்ட அவரது வசனத்தின் மூலமாகவே வழிநடத்தப்படுகின்றார்கள். இவர்கள் கிறிஸ்துவுக்கு உண்மையாயிருத்தல் என்ற சொற்றொடரை, ஏவப்பட்ட அவருடைய வசனத்தில் தரித்திருத்தல் என்பதாகவே கண்ணோக்குகின்றார்கள். கிறிஸ்தவர்களின் ஆராதனை, கிறிஸ்துவின் கரங்களாக இருந்து இவ்வுலகத்தில் செய்யும் அவர்களின் ஊழியம், மற்றும் கிறிஸ்துவுக்கென்று அன்றாட வாழ்க்கை ஆகியவற்றில் வேதாகமமே கிறிஸ்தவர்களை வழி நடத்துகின்றது.

சபையைப் பற்றிய பரிசுத்த ஆவியானவரின் சித்தரிப்பைக் காணுகையில், நாம் உறுதிப்பாட்டில் பெலத்துடன் இருத்தல் என்ற பண்பைக் காணுகின்றோம்.

### பரிவிரக்கத்தில் சுயநலமின்மை

சபையின் இந்தத் தெய்வீகச் சித்தரிப்பில் நாம் காணத்தவறக் கூடாததாக இருக்கும் இன்னொரு பண்பு, சபையில் ஒருவருக்கொருவர் காண்பித்த சுயநலமற்ற பரிவிரக்கமாகும். வசனத்திற்கு உண்மையிலேயே கீழ்ப்படிதல் என்ற அவர்களுடைய பண்பானது, ஒருவருக்கொருவர் பரிவிரக்கமுள்ள அன்பு செலுத்துவதை அவர்களுக்குள் உண்டாக்கியது. லூக்கா, ‘‘காணியாட்சிகளையும், ஆஸ்திகளையும் விற்று, ஒவ்வொருவனுக்கும் தேவையானதற்குத் தக்கதாக அவைகளில் எல்லாருக்கும் பகிர்ந்து கொடுத்தார்கள்’’ (அப். 2:45) என்று கூறினார்.

யூதர்கள், ரோம சாம்ராஜ்யம் முழுவதிலுமிருந்து, பெந்தெகொஸ்தே நாளைக் கொண்டாடுவதற்காக வந்திருந்தார்கள். இந்த பெந்தெகொஸ்தே நாள் சாதாரணமான ஒன்றாகவே இருக்கும் என்று அவர்கள் நினைத்திருந்தார்கள்; ஆனால் அவர்கள் முற்றிலுமாக வியப்படையும்படி, அது அப்படியிருக்கவில்லை. தீர்க்கதரிசிகள் எதிர்நோக்கியிருந்த வரலாற்றுச் சிறப்புடைய நாளாக அது அமைந்திருந்தது. பேதுருவின் செய்தியைக் கேட்ட பிறகு, அநேக

*யூதர்கள் கிறிஸ்தவர்களாக முடிவு செய்தனர் (அப். 2:41). கிறிஸ்துவுக்குக் கீழ்ப்படிதல் என்ற அவர்களின் முடிவு எல்லா வகையிலும் ஒரு மாற்றம் என்பதை அவர்களுக்கு அர்த்தப்படுத்தியது. அவர்கள் தாங்கள் அங்கம் வகிக்கும் சபையைப் பற்றி அப்போஸ் தலர்களால் போதிக்கப்படுவது என்ற ஒரு விஷயத்திற்காக இன்னமும் எருசலேமிலே தங்குவது தேவையாயிற்று. திடீரென்று இப்படி எருசலேமில் தங்கும்படியான முடிவெடுத்தது அவர்களில் அநேகருக்கு மிகுந்த சிரமமுள்ளதாயிருந்திருக்க வேண்டும், ஏனென்றால் இப்படித் தங்குவதென்று அவர்கள் முன் கூட்டியே திட்டமிட்டிருக்கவில்லை. அவர்களுக்குத் தங்க வீடு மற்றும் உணவு ஆகியவை தேவைப் பட்டிருக்கும் என்பதில் சந்தேகமில்லை. இப்படிப்பட்ட சூழ் நிலையை எதிர்நோக்காதிருந்த மற்ற கிறிஸ்தவர்கள், தூர இடத்தி லிருந்து வந்த இந்த சகோதர சகோதரிகளின் துன்பத்திற்கு என்ன பதில்செயல் செய்தார்கள்? அவர்களின் பதில்செயலானது பரிவிரக் கமும் அன்பும் உள்ளதாகச் சித்தரிக்கப்படுகின்றது, இதற்கொப்பா னதைக் காண்பது மிகவும் அரிதாகும். இந்த சகோதர சகோதரிகளைப் பராமரிப்பதற்காகச் சிலர் வீடுகளையும் நிலத்தையும் விற்று விட்டார் கள். கிறிஸ்து தமது சபையில் அங்கம் வகிப்போரிடம் எப்பொழுதுமே எதிர்பார்க்கும் பண்பாகவே அவர்களின் பரிவிரக்கம் விளங்குகின்றது.*

*இவ்வாறு அவர்கள் பகிர்ந்து கொண்டதென்பது அவர்களின் சுயவிருப்பத்தின்படியே செய்தார்கள் என்பதே, விளக்க முடியாத, அழகுள்ள ஒரு சத்தியமாகும். அவர்களின் கொடுத்தலானது அப்போஸ்தலர்களால் வலியுறுத்தப்படவுமில்லை, கேட்டு பெறப்பட வுமில்லை (அப். 5:4). அது மென்மையான பரிவிரக்கமும் கிறிஸ்துவைப் போன்ற அன்பும் உள்ள அவர்களின் இருதயங்களிலிருந்து தானாகவே வெளிக் கிளம்பியது. கிறிஸ்து அவர்களுக்குள்ளாக ஒரு புதிய இயல்பை, சுய நலமற்ற பரிவிரக்கம் என்ற இயல்பை உண்டாக்கி யிருந்தார்.*

*அவர்கள் கொடுத்தது அல்லது பகிர்ந்து கொண்டது என்பது எல்லாரும் சமமாக வேண்டும் அல்லது எல்லாரும் சம அளவில் பொருட்களை உடையவர்களாய் இருக்க வேண்டும் என்பதற்காக மட்டுமானதாக இருக்கவில்லை. அது ஒரு சமுதாய வாழ்வு என்பதாக மட்டுப்படுத்தப் படவில்லை; அது பட்சமுள்ள அன்பாக இருந்தது. தேவைப்பட்டவர்களுக்கு அவர்கள் கொடுத்தார்கள். அவர்கள் தேவைகளையே திருப்திப்படுத்தினார்கள், பேராசைகளையல்ல.*

*ஒவ்வொரு அவசர விஷயமும் அவசியத்தை ஏற்படுத்தும் என்பதை அவர்கள் அறிந்தனர். மக்களுக்குத் தேவை ஏற்பட்ட போது, அந்தத் தேவைகளைச் சந்திப்பதற்கு மற்றவர்கள் அன்பினால் செயல் பட்டனர்-அது தியாகமுள்ள கொடுத்தல் என்று அழைக்கப்பட்டது.*

*பின்னொரு சமயத்தில் சபையைப் பற்றி லூக்கா, "நிலங்களையும் வீடுகளையும் உடையவர்கள் அவைகளை விற்று, விற்கப்பட்டவை களின் கிரயத்தைக் கொண்டுவந்து, அப்போஸ்தலருடைய பாதத்திலே வைத்தார்கள். அவனவனுக்குத் தேவையானதற்குத் தக்கதாய்ப் பகிர்ந்து கொடுக்கப்பட்டது; அவர்களில் ஒருவனுக்கும் ஒன்றும் குறைவாயிருந்ததில்லை" (அப். 4:34, 35) என்று கூறினார். மேலும் அவர், "ஒருவனாகிலும் தனக்குள்ளவைகளில் ஒன்றையும் தன்னு டையதென்று சொல்லவில்லை; சகலமும் அவர்களுக்குப் பொதுவா யிருந்தது" (அப். 4:32ஆ) என்றும் கூறினார்.*

*பரிவிரக்கம் என்பது கிறிஸ்துவின் சபையிலுள்ள ஒரு அடிப்படைக் குணாதிசயமாகும். அவரது வசனத்திற்கு உண்மையான கீழ்ப்படிதல் இல்லாத இடத்தில் அவரது சபை இருக்க முடியாது; கிறிஸ்துவின் இருதயத்தினுடைய வெளிப்பாடாகப் பரிவிரக்கம் சூழ்ந்து கொள்ளாத இடத்திலும் சபை இருக்க முடியாது. உண்மைக் கிறிஸ்தவர்கள் தங்கள் இருதயங்களில் வாசம் பண்ணுகின்ற தேவ னால் உண்டாக்கப்பட்ட, செயல்படுகின்ற சகோதர அன்பைப் பெற்றிருக்கின்றார்கள். யோவான், "ஒருவன் இவ்வுலக ஆஸ்தியுடைய வனாயிருந்து, தன் சகோதரனுக்கு குறைச்சலுண்டென்று கண்டு, தன் இருதயத்தை அவனுக்கு அடைத்துக்கொண்டால், அவனுக்குள் தேவ அன்பு நிலை கொள்ளுகிறதெப்படி?" (1 யோவா. 3:17) என்று எழுதினார்.*

*சபையைப் பற்றிய பரிசுத்த ஆவியானவருடைய முதலாவது சித்தரிப்பில், சுயநலமற்ற பரிவிரக்கம் என்பது தெளிவாகவே குறிப்பிடத்தக்க ஒரு பண்பாக இருக்கின்றது.*

## கிறிஸ்துவுக்குள் ஒருமித்தல்

*இந்தச் சித்தரிப்பில் கிறிஸ்துவின் சபையினுடைய மூன்றாவது பண்பாக அதன் ஒருமைப்பாடு காணப்படுகின்றது. சுவிசேஷத்திற்கும் அப்போஸ்தலருடைய உபதேசத்திற்கும் இவர்கள் கீழ்ப்படிந்ததின் மூலம் பரிசுத்த ஆவியானவர் கிறிஸ்துவின் சபையாருக்கு சிந்தையில் ஒருமைப்பாட்டைக் கொடுத்திருந்தார். லூக்கா, "விசுவாசி*

*களெல்லாரும் ஒருமித்திருந்து, சகலத்தையும் பொதுவாய் வைத்து அநுபவித்தார்கள்'' (அப். 2:44) என்று கூறினார். மேலும் அவர், "அவர்கள் ஒருமனப்பட்டவர்களாய்த் தேவாலயத்திலே அநுதினமும் தரித்திருந்து, வீடுகள் தோறும் அப்பம் பிட்டு, மகிழ்ச்சியோடும் கபடமில்லாத இருதயத்தோடும் போஜனம்பண்ணி'' (அப். 2:46) என்றும் கூறினார்.*

*இயேசு கட்டிய சபையில் உள்ள இந்த அழகிய ஒருமைப் பாட்டை நாம் கூர்ந்து கவனிக்கையில், சபையின் இந்த முதலாவது சித்தரிப்பின் முக்கியத்துவத்தை நமக்கு நாமே நினைவுபடுத்திக் கொள்வோம். கிறிஸ்துவின் பூமிக்குரிய வாழ்வு மற்றும் மரணத்தின் விளைவை இந்தச் சித்தரிப்பு நமக்குத் தருகின்றது. கிறிஸ்துவானவர் எப்படிப்பட்ட சபையை நிலைநாட்ட அல்லது உண்டாக்க வந்தார்? மாறுபட்ட பல பெயர்களைத் தரித்துக்கொண்டு, மாறுபட்ட மதக் கோட்பாடுகளின்படியாக வாழ்ந்து கொண்டு, ஒருவருக்கொருவர் ஐக்கியமற்ற பல்வேறு அமைப்புகள் கொண்ட ஒரு பெரிய நிறுவனத்தை அவர் நிலைநாட்டினாரா? அல்லது தாம் ஒருவரே தலையாக இருந்து ஆளக் கூடிய ஐக்கியமான ஒரே சரீரத்தை அவர் உண்டாக்கினாரா? ஒருவேளை புதிய ஏற்பாடு முழுவதிலேயும் நாம் பார்க்கையில் அப். 2ல் தான் கிறிஸ்து தமது சபை எப்படியிருக்க வேண்டும் என்று விரும்பியதும், இவ்வுலகில் அது எப்படி வாழ வேண்டுமென்ற அவரது விருப்பமும் தெளிவாக உருவகப் படுத்தப் பட்டுள்ளது. இந்தச் சித்தரிப்பானது சபையின் பண்பாக உள்ள ஒருமைப்பாடுள்ள சிந்தை மற்றும் வாழ்க்கையைத் தவறாமல் வெளிப் படுத்துகின்றது. இன்றைய நாட்களில் தமது சபையின் தன்மை பற்றிய கிறிஸ்துவின் விருப்பம் இதுவாகவே இருக்க வேண்டும். மார்க்க உலகத்தில் இன்று மேலோங்கியிருக்கும் பிரிவுகள் எல்லாம் மனிதன் தனது உலக ஞானத்தில் மூழ்கி, கிறிஸ்துவின் சபையை விட்டு விலகி, தனது சொந்தமாக உண்டாக்கிக்கொண்ட பிரிவுக் கூட்டங்களே ஆகும்.*

*கர்த்தருடைய சபையின் ஒருமைப்பாடு என்பதைத் திருமண உறவில் உண்டாகும் ஒருமைப்பாட்டைக் கொண்டு விளக்கப்படுத்த முடியும். திருமணத்தில் ஒரு ஆணும் ஒரு பெண்ணும் ஒன்றாகின்றார் கள் (எபே. 5:31). அவர்கள் திருமணம் முடிந்ததும் ஒரு புதிய குடும்பமாக மலருகின்றனர். அவர்கள் இருவரும் இப்பொழுது ஒருவருக்கொருவர் உரியவர்களாகின்றனர், ஒரு புதிய இயல்பைப்*

*பெறுகின்றனர். சுயநல நோக்கங்கள் மற்றும் தனிப்பட்ட இலக்குகள் எல்லாம் மரிக்கின்றன; இந்தப் புதிய குடும்பத்திற்கான புதிய நோக்கங்களும், இலக்குகளும் உயிர் பெறுகின்றன. அவர்கள் ஒரே இருதயமும் ஒரே ஆத்துமாவுமுள்ளவர்களாய் ஐக்கியத்தோடு ஒன்று கூடி வாழ்ந்து, பராமரிப்பு, அன்பு மற்றும் தங்களின் வீட்டாருடைய எதிர்காலம் ஆகியவற்றிற்காக ஒன்றுகூடி உழைக்கின்றனர். இந்த ஒருமைப்பாட்டை அவர்கள் எவ்விதம் பெற்றனர்? திருமண சட்டங்களை நிறைவேற்றுவதிலும், திருமணத்தில் பிரவேசிப்பதிலும் அவர்கள் கொண்டிருந்த பொதுவான சம்மதித்தலே இதை அவர்களுக்குத் தந்தது. அவர்கள் இந்த ஒருமைப்பாட்டை எவ்விதம் பராமரிக்கின்றனர்? அவர்கள் ஒருவரையொருவர் நேசித்து, ஒருவர் மேலொருவர் அக்கறையாயிருந்து, ஒருவரையொருவர் மன்னித்து, தங்களின் திருமண வாக்குறுதிகளை மதித்து, திருமணம் என்ற ஆசீர்வாதமான நிலையையும் மதிப்பதாலேயே இதைப் பராமரிக்கின்றார்கள்.*

*சபையைப் பொறுத்தமட்டில் இது உண்மையாக இருப்பதில்லையா? சபையின் ஒருமைப்பாட்டிற்குள் நாம் எவ்விதம் பிரவேசிக்கின்றோம்? நமது சொந்த சம்மதியினாலேயே நாம் கிறிஸ்துவின் சுவிசேஷத்திற்கு நமது வாழ்க்கையை அர்ப்பணித்து, அவரது சரீரமாகிய சபைக்குள் பிரவேசிக்கின்றோம். அந்த சரீரத்தில் நாம் பிரவேசிக்கையில், நாம் பரிசுத்த ஆவியானவரால் கிறிஸ்துவுடனும் சபையின் ஒவ்வொரு உறுப்பினருடனும் ஒருமைப்படுத்தப்படுகின்றோம். நாம் ஒரே இருதயம் மற்றும் ஒரே ஆத்துமாவுடன் அன்புகூரவும், ஊழியம் செய்யவும், அவரது சரீரமாக வாழவும் தொடங்குகின்றோம். இந்த ஒருமைப்பாட்டை நாம் எவ்விதம் பராமரிக்கின்றோம்? ஒருவரையொருவர் நேசித்து, மன்னித்து, ஆராதனை, ஊழியம் மற்றும் அன்றாட வாழ்க்கையில் கிறிஸ்துவின் வசனத்தைக் கனப்படுத்துவதன் மூலம் அதைப் பழுது படாமல் காத்துக்கொள்கின்றோம்.*

*ஒருமைப்பாடு என்பது கிறிஸ்துவின் சபையில் உள்ள மறுக்க முடியாத ஒரு பண்பாகும். கிறிஸ்துவின் உண்மையான சபை என்பது பிரிவினைகள் கொண்டதாக இருக்க முடியாது. இந்த ஒருமைப்பாடானது, நாம் கிறிஸ்துவின் சரீரத்தில் பிரவேசிக்கும்போது பரிசுத்த ஆவியானவரால் நமக்குக் கொடுக்கப்படுகின்றது; நாம் அவரது சரீரமாக வாழுகையில் ஒன்று நாம் அதை பராமரிக்கின்றோம் அல்லது*

*நாம் அதைச் சேதப்படுத்துகின்றோம். கிறிஸ்துவின் சரீரத்தில் பிரிவினை என்பது ஒவ்வொரு கிறிஸ்தவராலும் நினைத்துக்கூடப் பார்க்க இயலாததாக இருக்க வேண்டும். பரிசுத்த ஆவியானவருடைய சித்தரிப்பின்படி, இந்த உலகத்தில் ஒருமைப்பாடு காணப்படும் ஒரே இடம் கிறிஸ்துவின் சரீரமேயாகும்.*

## இந்நாட்களில் சபையை எவ்விதம் அடையாளப்படுத்த முடியும்?

### அதன் தொடக்கத்தைக் கவனியுங்கள்

*புதிய ஏற்பாட்டின் சபையை அடையாளப்படுத்தக் கூடிய முக்கியப் பண்புகளில் ஒன்று, அது தொடங்கப்பட்ட காலம் ஆகும். புதிய ஏற்பாட்டின் சபை தொடங்கிய காலக்கட்டத்திலிருந்து மாறுபட்ட வேறொரு காலகட்டத்தில் தொடங்கிய எந்த ஒரு பிரிவினை சபைக் கூட்டமும் புதிய ஏற்பாட்டின் சபையாக இருக்க முடியாது என்பது தெளிவு.*

*இயேசு தமது சொந்த ஊழியத்தில் முக்கால் பாகத்தை நிறைவேற்றிய நிலையில் இருந்த சமயம், "நான் என் சபையைக் கட்டுவேன்" என்று வாக்குத்தத்தம் செய்தார் (மத். 16:18). அவர் தமது உயிர்த்தெழுதலைத் தொடர்ந்து வந்த முதலாம் பெந்தெகொஸ்தே நாளன்று தமது வாக்குத்தத்தத்தை நிறைவேற்றினார் (அப். 2:41-47). இந்த பெந்தெகொஸ்தே நாள் முதல், புதிய ஏற்பாட்டின் எஞ்சிய பகுதிகள் எல்லாவற்றிலும் சபையானது இருக்கின்ற ஒன்றாகவே பேசப்படுகின்றது (அப். 5:11; 7:38; 8:1, 3).*

*ஒருவேளை யாரேனும், "எனது சபையானது பழைய ஏற்பாட்டிலேயே தொடங்கப்பட்டது" என்று சொல்வார்களென்றால், அவரது சபை காலத்திற்கு மிகவும் முந்தியதாகின்றது. இராஜ்யத்தின் வருகையைப் பற்றிப் பழைய ஏற்பாடு முன்னுரைத்தது, ஆனால் சபை நிலை நாட்டப்பட்டதற்கான பதிவுகள் எதுவும் அதில் இல்லை. ஒருவேளை ஒருவர், ''எனது சபை கி.பி. மூன்றாம் நூற்றாண்டில் தொடங்கப்பட்டது'' என்று சொல்வாரேயானால், அவரது சபை, காலத்திற்கு மிகவும் பிந்தியதாகின்றது. இது புதிய ஏற்பாட்டின் சபையாக இருக்க முடியாது. சபையானது எதிர்காலத்தில் ஒரு நாளில் நிலைநாட்டப்படும் என்ற கண்ணோட்டத்தில் புதிய ஏற்பாடு*

முடிவடைவதில்லை. மாறாக ரோம சாம்ராஜ்யமானது தனது வல்லமையினால், உலக முழுவதிலும் சபை பரவுதலைத் தடை செய்யும் செயலுடன் அது முடிவடைகின்றது.

பொதுவாகப் பார்க்கும்போது, புரோட்டஸ்டெண்ட் சபைகள் பதினாறாம் நூற்றாண்டில், சீர்திருத்தும் காலத்தின்போதோ அல்லது பின்போ திடீரெனத் தோன்றின. இவ்வகையான நாமகரணக் கூட்டம் எதுவும் புதிய ஏற்பாட்டில் காணப்படுவதில்லை. புதிய ஏற்பாட்டின் சபை நிலைநாட்டப்பட்டு அநேக நூற்றாண்டுகளுக்குப் பிறகு புதிய ஏற்பாட்டின் ஒழுங்கிலிருந்து விலகிச் செல்லும் அமைப்புகள் தோன்றலாயின, நாமகரணக் கூட்டங்கள் அமைக்கப்பட்டன. எந்த நாமகரணக் கூட்டமும் தொடங்கப்படுவதற்கு அநேக காலங்களுக்கு முன்பாகவே, மக்கள் கிறிஸ்தவர்களாகி, வாழ்ந்து, கிறிஸ்துவின் சரீரமாகவே ஆராதனை செய்ததையே புதிய ஏற்பாடு சித்தரிக்கின்றது.

ஒரு குறிப்பிட்ட சபையைப் பற்றி நீங்கள் கவனிக்கும்போது, "இது உண்மையில் எப்போது தொடங்கியது?'' என்று கேளுங்கள். கர்த்தருடைய உயிர்த்தெழுலுக்குப் பிறகு வந்த முதல் பெந்தெகொஸ்தே நாளுக்கு மாறுபாடான எந்தக் காலத்திலும் அது தோன்றியிருந்தால், அது புதிய ஏற்பாட்டின் சபையாக இருக்க முடியாது.

### அதன் நோக்கத்தைக் கவனியுங்கள்

புதிய ஏற்பாட்டின் சபையை அடையாளப்படுத்தும் இன்னொரு பண்பு, அதன் நோக்கம் அல்லது குறிக்கோள் ஆகும். புதிய ஏற்பாட்டின் சபையானது, புதிய ஏற்பாட்டின் சபையாகவே இருப்பதைத் தவிர வேறு எந்த இலக்கையும் பெற்றிருப்பதில்லை. அது புதிய ஏற்பாட்டின் சபையைப் போல இருப்பதற்கோ, புதிய ஏற்பாட்டின் சபையுடன் உறவு கொண்டதாக இருப்பதற்கோ, அல்லது புதிய ஏற்பாட்டின் சபைக்கு நெருங்கியதாக இருப்பதற்கோ முயற்சி செய்வதில்லை. அது புதிய ஏற்பாட்டின் சபையாகவே இருப்பதற்குத்தான் விரும்புகின்றது!

"புதிய ஏற்பாட்டின் சபை எது?" என்ற கேள்வியைக் கருத்தில் கொள்ளும்போது, ஒரு குறிப்பிட்ட சபையினிடம் நீங்கள், "இந்த உலகத்தில் இதன் குறிக்கோள் அல்லது நோக்கம் என்ன?'' என்ற கேள்வியைக் கேட்கலாம். புதிய ஏற்பாட்டின் சபையானது இவ்வுலகத்தில் கிறிஸ்துவின் சரீரமாய் இருக்கின்றது. பவுல், "ஏனெனில், நமக்கு ஒரே சரீரத்திலே அநேக அவயவங்களிருந்தும்,

எல்லா அவயவங்களுக்கும் ஒரே தொழில் இராதது போல, அநேகராகிய நாமும் கிறிஸ்துவுக்குள் ஒரே சரீரமாயிருக்க, ஒருவருக்கொருவர் அவயவங்களாயிருக்கிறோம்" (ரோமர் 12:4, 5) என்று கூறினார். எந்த ஒரு சபையும் தான் இருக்கின்ற சமூகத்தில் கிறிஸ்துவின் சரீரமாய் இருப்பதை நாடவில்லையென்றால் அது புதிய ஏற்பாட்டின் சபையாக இருப்பதில்லை.

கிறிஸ்து தமது சீஷர்களாயிருக்கும்படி மக்களை அழைக்கையில், அவர்கள் சமயக் குழுவாக இருக்கும்படிக்கு அவர்களை அழைக்க வில்லை. தமது சீஷர்கள் இந்த உலகத்தில் தமது சரீரமாய் இருக்கும் படிக்கே அவர் அவர்களை அழைத்தார். இந்த சரீரமானது அவரது பெயரைத் தரித்து, அவருடைய நாமத்திலே ஒன்று கூடி ஆராதித்து, அவருடைய மகிமைக்காகவே இந்த உலகத்தில் அவருடைய ஊழியத்தைச் செய்ய வேண்டும்.

## அதன் நடைமுறைகளைக் கவனியுங்கள்

புதிய ஏற்பாட்டின் சபையை அடையாளப்படுத்தும் இன்னு மொரு பண்பு அதன் நடைமுறைகள் ஆகும். புதிய ஏற்பாட்டின் சபை என்று சொல்லிக் கொள்வது ஒரு விஷயமாக இருக்கையில், அந்த சபையானது அதன் நடை முறைகளில் அதன் அடையாளத்தை விளக்கப்படுத்த வேண்டியது முற்றிலும் இன்னொரு விஷயமாக இருக் கின்றது. எவரொருவரும் தன்னை புதிய ஏற்பாட்டின் சபையாராக உரிமைகோர முடியும், ஆனால் இந்த உரிமை கோரலுக்கு எப்பொழுதுமே நடைமுறையின் வழியாகவே நிரூபணம் கொடுக்க முடியும்.

புதிய ஏற்பாட்டின் சபையினுடைய நடைமுறைகள் புதிய ஏற்பாட்டில் எளிதில் காணப்படுகின்றன. புதிய ஏற்பாட்டின் சபையார் ஒவ்வொரு வாரத்தின் முதல் நாள் தோறும் ஆராதிக்க ஒன்று கூடி, கர்த்தருடைய மரணத்தின் நினைவாக அப்பம் பிட்டனர் (அப். 20:7; 1 கொரி. 11:20; எபி. 10:25). கிறிஸ்தவர்கள் ஒன்றுகூடித் தங்கள் இருதயங்களிலே கீர்த்தனம் பண்ணி, ஒருவருக்கொருவர் புத்தி சொல்லும்படியாக பாடல்கள் பாடலாம். ஆராதனையில் இசைக் கருவிகள் பயன்படுத்தியதாகக் குறிப்புகளோ அல்லது அதற்கான கட்டளையோ புதிய ஏற்பாட்டில் தரப்படவில்லை (எபே. 5:19; கொலோ. 3:16). தேவனுடைய ஊழியத்தைச் செய்வதற்காகவும், ஏழைகளுக்கு உதவுவதற்காகவும் அவர்கள் தங்கள் வரவுக்குத் தக்கதாக

*வாரத்தின் முதல் நாள் தோறும் காணிக்கை கொடுத்தார்கள் (1 கொரி. 16:1, 2). அவர்கள் ஒன்றுகூடி ஜெபம் செய்து, ஏவப்பட்ட மனிதர்களால் வெளிப்படுத்தப்பட்ட தேவனுடைய சித்தத்தைக் கவனித்தார்கள் (அப். 2:42). சொருபங்கள் அல்லது விக்கிரங்களை வணங்குவது, மெழுகுவர்த்திகள் அல்லது தூபவர்க்கங்களை ஆராதனையில் பயன்படுத்துவது போன்ற நடைமுறைகள் அங்கீ கரிக்கப்படவும் இல்லை, அவை புதிய ஏற்பாட்டின் சபையாருடைய நடைமுறையில் ஒரு பாகமாக இருக்கவும் இல்லை. புதிய ஏற்பாட்டின் படியான ஒவ்வொரு சபையும் அந்தந்த சபையிலேயே இருந்த கண்காணிகள் அல்லது மூப்பர்கள் மூலமாகவே ஒழுங்குபடுத்தப் பட்டன (1 தீமோ. 3:1-7) மற்றும் அவர்கள் அனைவருமே சபையின் ஒரே தலைவராக இயேசுவை மட்டுமே நோக்கினர். உதவிக்காரர்கள் (1 தீமோ. 3:8-11) மற்றும் சுவிசேஷகர்கள் (2 தீமோ. 4:1, 2) ஆகியோர் மூப்பர்களின் கண்காணிப்பின் கீழ் சபைக்கு ஊழியம் செய்தனர்.*

*புதிய ஏற்பாட்டின் சபையை அடையாளப்படுத்த, புதிய ஏற்பாட்டின் சபையினுடைய நடைமுறைப் பண்புகளை நாம் பட்டியலிட வேண்டும், பிறகு இந்தப் பட்டியலை நம்மைச் சுற்றி நாம் காணும் சபைகளுடன் ஒப்பிட்டுப் பார்க்க வேண்டும். புதிய ஏற்பாட்டின் முன் மாதிரியைப் பின்பற்றும் சபை ஒன்றை நாம் காணும் போது, அது உண்மையிலேயே அந்த முன்மாதிரிக்குப் பொருத்த மானதாய் இருக்கும் என்றால், நாம் கர்த்தருடைய சபையாகிய புதிய ஏற்பாட்டின் சபையைக் கண்டுவிட்டோம் என்று சொல்ல முடியும்.*

## அதன் பெயர்களைக் கவனியுங்கள்

*புதிய ஏற்பாட்டின் சபையை அடையாளப்படுத்தும் இன்னொரு பண்பு அதன் பெயர் ஆகும். புதிய ஏற்பாட்டின் சபையை விளக்க வேதாகமத்தில் பயன்படுத்தப்படும் சொற்றொடர்கள் யாவும் அதை (சபையை) நாமகரணக் கூட்டங்களிலிருந்து தனிப்படுத்திவைப்பவை களாய் இருக்கின்றன.*

*புதிய ஏற்பாட்டில், புதிய ஏற்பாட்டின் சபையானது "கிறிஸ் துவின் சரீரம்" (எபே. 4:12), "தேவனுடைய சபை" (1 கொரி. 1:2), "கிறிஸ்துவின் சபையார்" (ரோமர் 16:16), "முதற் பேறானவர்களின் சபை" (எபி. 12:23), "பரலோக இராஜ்யம்" (மத். 16:19) மற்றும் "சபை" (எபே. 1:22) என்றெல்லாம் குறிப்பிடப்படுகின்றது. இந்தச் சொற் றொடர்கள் யாவும் சபையின் இயல்பையும், அடையாளத்தையும்*

*விளக்கப்படுத்துகின்றன. இவைகள் பெயர்கள் என்பதை விட விளக்கங்கள் என்பதே மிகவும் சரியானதாகும்.*

*புதிய ஏற்பாட்டில் காணப்படாத ஒரு சொற்றொடர் அல்லது பெயரால் அறியப்படும் ஒரு சபையை நீங்கள் கவனித்தால் என்னவாகும்? நிச்சயமாகவே அது ஏற்றுக் கொள்ளப்படத் தக்கதல்ல என்பதை நாம் ஒப்புக் கொள்ள வேண்டும். முதலாவதாக, இது புதிய ஏற்பாட்டின் சபையாக இருந்தால், ஏன் புதிய ஏற்பாட்டிற்கு அந்நியமான ஒரு பெயரைத் தனக்கென்று பயன்படுத்த வேண்டும்? இரண்டாவதாக, இது புதிய ஏற்பாட்டின் சபையாக இருந்தால், புதிய ஏற்பாட்டின் சபைதான் என்பதைச் சுட்டிக்காட்ட புதிய ஏற்பாட்டின் சொற்றொடர் ஒன்றை ஏன் பயன்படுத்துவதில்லை? மூன்றாவதாக, புதிய ஏற்பாட்டின் சபையொன்று, புதிய ஏற்பாட்டிற்கு அந்நியமான ஒரு சொற்றொடரை உண்மையிலேயே சிந்திக்காமல் பயன்படுத்தக் கூடிய சாத்தியக் கூறு உண்டு. இதை அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவரும் போது நிச்சயமாகவே அவர்கள் புதிய ஏற்பாட்டின் பெயர்களாக மாற்றிக் கொண்டு, அதன் மூலம் மற்றவர்கள் தங்களைப் புதிய ஏற்பாட்டின் சபையல்லாத வேறொரு சபை என்று தவறாகக் கருதாமல் இருப்பதில் சந்தோஷமடைவார்கள்.*

*ஒரு சபையானது, புதிய ஏற்பாட்டின் சபையாக இருக்க விரும்பினால், அது புதிய ஏற்பாட்டின் சபையினுடைய பண்புகளை வளர்த்துக் கொண்டு, அது புதிய ஏற்பாட்டின் சபை என்பதை ஒவ்வொருவரும் அறிய வேண்டும் என்று விரும்புகின்றதாயிருக்கும், புதிய ஏற்பாட்டின் சபைக்கென்று புதிய ஏற்பாட்டில் கொடுக்கப் பட்டுள்ள பெயர்களை மட்டுமே அது தனக்கென்று நடைமுறையில் பயன்படுத்த வேண்டும்.*

## முடிவுரை

*புதிய ஏற்பாட்டின் சபையைப் பற்றிய பரிசுத்த ஆவியானவரின் சித்தரிப்பானது, கிறிஸ்துவின் சபையை மற்ற எல்லா மார்க்க அமைப்புகளில் இருந்தும் எல்லாக் காலத்திலும் தனிப்படுத்திக் காட்டக்கூடிய மூன்று குறிப்பிடத்தக்க பண்புகளை வெளிப்படுத்து கின்றது. முதலாவது, அவருடைய சபை என்பது, அவரது வசனத்திற்குக் கீழ்ப்படிந்து ஏவப்பட்ட அவரது வசனத்தில் உறுதியாய்த் தரித் திருக்கும் மக்களின் ஒரு குழுவாகும். இரண்டாவது, அவரது சபை*

*யானது ஒவ்வொரு உறுப்பினர் மேலும் உள்ள பரிவிரக்கத்தினால், சபையில் தேவையில் உள்ள உறுப்பினர்கள்மேல் கொண்ட அன்பான அக்கறையினால், அவர்களைத் தங்கள் பொருட்கள் மற்றும் ஐசுவரியங்களை விட மேலான நிலையில் வைத்துப் போற்றுவது என்ற மாபெரும் அடையாளப் பண்பு கொண்டதாக இருக்கிறது. மூன்றாவது, சுவிசேஷத்தின் மூலமாகக் கிறிஸ்துவின் சபைக்குள் பிரவேசிக்கும் ஒவ்வொரு நபரும் பரிசுத்த ஆவியானவரால் கிறிஸ்துவுடனும், மற்ற எல்லா உறுப்பினர்களுடனும் ஒன்றாக்கப் படுகின்றார், மற்றும் அந்த ஒருமைப்பாட்டைத் தமது அன்பினாலும், அன்றாடம் கிறிஸ்துவின் வார்த்தையைக் கடைப்பிடிப்பதாலும் பராமரிக்கின்றார். சபையானது ஒரே இருதயமும் வாழ்க்கையும் கொண்ட ஒரே குடும்பமாகச் சித்தரிக்கப்படுகின்றது.*

*இன்றைய நாட்களில் நாம் எவ்விதம் கிறிஸ்துவின் சபையாராய் இருக்க முடியும்? இதன் வழிமுறையை இரண்டு சொற்றொடர்கள் நமக்கு குறிப்பாய்த் தெரிவிக்கின்றன: "மறு பிரதியாயிருங்கள்" மற்றும் "ஒப்புக் கொடுங்கள்." கிறிஸ்துவைப் பின்பற்றுபவராவது என்பது பற்றி இப்பாடத்தில் காணப்படுபவைகளை அப்படியே மறுபிரதி எடுத்தது போல நாம் பின்பற்ற வேண்டும். பேதுருவும் மற்றவர்களும் பிரசங் கித்ததைக் கேட்ட இந்த மக்கள், "நாங்கள் என்ன செய்ய வேண்டும்?" என்று கதறினார்கள். பேதுரு அவர்களிடத்தில், "நீங்கள் மனந்திரும்பி, ஒவ்வொருவரும் பாவமன்னிப்புக்கென்று இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளுங்கள் ..." (அப். 2:38) என்று கூறினார். வசனத்தின் மூலம் அவர்களுக்குள் நாட்டப்பட்ட விசுவாசத்தினாலே அவர்கள் மனந்திரும்பி, தங்கள் பாவ மன்னிப்புக் கென்று ஞானஸ்நானம் பெற்றுக் கொண்டார்கள், அவர்களைக் கர்த்தர் தமது சபையிலே சேர்த்துக்கொண்டார். இதுவே கிறிஸ்து மக்களைத் தமக்குச் சொந்தமாக்கும் வழியாகும். இதே வழியை இன்றைய நாட்களில் ஒருவர் பின்பற்றும்போது, கிறிஸ்து அன்று அந்த மக்களுக்குச் செய்ததையே இவருக்கும் செய்வார். அவர்களிடம் அவர் அன்பு காட்டியது போலவே நம் ஒவ்வொருவரிடமும் அன்பு காட்டுகிறார்; அவர்களுக்காக மட்டுமல்ல நமக்காகவும் அவர் மரித்தார்.*

*நாம் கிறிஸ்துவின் வசனத்திற்குக் கீழ்ப்படிந்து, அவரது சபையாக வாழ்வதற்கு நம்மையே ஒப்புக் கொடுப்போம். அப். 2ன் சித்தரிப்பின் படி, கிறிஸ்துவின் வசனத்தைப் பின்பற்றிக் கொண்டு, கிறிஸ்துவின்*

இருதயத்துடன் வாழ்ந்து, பரிசுத்த ஆவியானவர் கிறிஸ்துவுக்குள்ளாக அவரது சபைக்குக் கொடுத்துள்ள ஐக்கியத்தைப் பராமரிக்கச் செய்வதன் மூலமே இது நடத்தப் பெற வேண்டும்.

கிறிஸ்துவின் சபையானது எப்படியாகக் காணப்படுகிறது என்று இப்பொழுது நாம் அறிந்துள்ளபடியால் கிறிஸ்துவின் சபையாராகும் படி நாம் முடிவெடுப்போம்.

## பாட வினாக்கள்

*(விடைகள் 314 ம் பக்கங்களில்)*

1. "அப்போஸ்தலருடைய உபதேசத்தில் உறுதியாய்த் தரித்திருந் தார்கள்" (அப். 2:42) என்ற சொற்றொடரை விவாதித்து அறியவும். இந்நாட்களில் நமக்கு இந்தச் சொற்றொடர் அர்த்தப்படுத்துவது என்ன?
2. எருசலேம் சபையில் இருந்த ஒருமைப்பாட்டின் மாதிரியை விளக்குக.
3. இன்றைய நாட்களில் கிறிஸ்துவின் சபை என்பது எவ்விதம் காணப்பட வேண்டியதாயுள்ளது?
4. புதிய ஏற்பாட்டின் சபை எது என்பதை முடிவு செய்வது மிகவும் மேலானதாகும். ஏன்?
5. அப். 2ல் பெந்தெகொஸ்தே நாளன்று புதிய ஏற்பாட்டின் சபை தொடங்கியது என்று காட்டும் வேத வசனங்களைப் பட்டியலிடவும்.
6. நாமகரணக் கூட்டங்கள் எப்பொழுது திடீரெனத் தோன்றின?
7. கிறிஸ்துவின் சரீரமாக உருவாகுவது யார்? தனிப்பட்ட கிறிஸ்தவர்களா அல்லது நாமகரணக் கூட்டங்களா? (1 கொரி. 12:24ஐக் காணவும்).
8. புதிய ஏற்பாட்டின் சபை பெயரிடப்பட்டிருந்தது போலவே அதே வழிமுறையில்தான் ஒரு சபை பெயரிடப்பட வேண்டும் என்பது ஏன்?
9. புதிய ஏற்பாட்டின் சபையினுடைய நடைமுறைகளை இன்றைய நாட்களில் சபைகள் பின்பற்ற வேண்டுமா?

## வார்த்தை உதவிகள்

***அவருக்குள் நிலைத்திருத்தல்*** *- இயேசுவின் உபதேசங்களை நேசித்து, கற்றுணர்ந்து, கீழ்ப்படிதல் (யோவா. 8:30-32).*

***அப்பம் பிட்குதல்*** *- கர்த்தருடைய பந்தியை ஆசரித்தல் (அப். 2:42; 20:7ஐக் காணவும்).*

***உதவிக்காரர்கள்*** *- சபையில் ஊழியம் செய்யும்படியாகத் தேர்ந்தெடுக்கப்படும் தகுதியுள்ள மனிதர்கள் (1 தீமோ. 3:8-13). இவர்கள் மூப்பர்களின் கீழாகப் பணியாற்றுகின்றனர் (பிலி. 1:1; அப். 20:28).*

***மூப்பர்கள்*** *- உள்ளூர் சபையைக் கண்காணிக்கும்படி நியமிக்கப் படுகின்ற பக்குவம் பெற்ற கிறிஸ்தவ மனிதர்கள் (1 தீமோ. 3:1-7).*

***கருவிகளாலான இசை*** *- கம்பி, காற்று மற்றும் வெண்கலம் இவற்றைப் பயன்படுத்தும் இசைக் கருவிகள், இசைச் சாவிப் பலகைகள் அல்லது மத்தளம் முதலிய மனிதனால் உண்டாக்கப்பட்ட இசைக் கருவிகளின் துணையுடன் பாடல்கள் பாடுதல். சபை ஆராதனையில் இவ்வித இசை பயன்படுத்தப்பட்டதற்கான குறிப்பெதுவும் புதிய ஏற்பாட்டில் கிடையாது. பொது ஆராதனையில் பாடல்களும் ஒரு பாகமாய் இருக்க வேண்டும் என்று தேவன் விரும்புகின்றார் (எபி. 2:12ஆ; எபே. 5:19; கொலோ. 3:16). தனிப்பட்ட பக்தி முயற்சிகளில் பாடல்கள் பாடுவதும் யாக்கோபு 5:13ல் ஊக்கப் படுத்தப்படுகின்றது.*

***புரோட்டஸ்டென்ட்*** *- புரோட்டஸ்டென்ட் சீர்த்திருத்தக் கொள்கைகளின் அடிப்படையில் விசுவாசமும், நடைமுறைகளும் கொண்டுள்ள, மனிதரால் உண்டாக்கப்பட்ட மார்க்கக் குழுக்களுக்குத் தரப்பட்ட பெயர். இந்த இயக்கத்தின் தலைவர்கள் கத்தோலிக்க நடைமுறைகளில் சிலவற்றை (போப் மற்றும் குருக்களின் அதிகாரத்தை அங்கீகரித்தல் போன்றவற்றை) "எதிர்த்து" நின்றனர். இந்த இயக்கமானது சில தவறுகளைப் புறக்கணித்திருக்கையில், புதிய ஏற்பாட்டின் சபையானது தேவனுடைய வசனத்தின் அடிப்படையிலேயே அமையப் பெற்றதாய் இருக்க வேண்டும்-மற்றவர்களின் நடைமுறைக்கான பதில்செயலாய் நமது நடைமுறைகள் அமையத் தேவையில்லை.*

---

*[1]இந்த வசனப்பகுதியில் கர்த்தருடைய பந்தி எத்தனை நாட்களுக் கொருமுறை ஆசரிக்கப்பட்டதென்று லூக்காவால் விவாதிக்கப்படவில்லை, ஆனால் அப். 20:7ல் அவர் இயேசு உயிர்த்தெழுந்த நாளாகிய வாரத்தின் முதல் நாள் தோறும் சபையாரால் கர்த்தருடைய பந்தி பங்கெடுக்கப்பட்டது என்று குறிப்பிடுகின்றார்.*